(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(7).]

# பாராளுமன்றம்

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 பெப்ரவரி 23 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2017 மார்ச்சு 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 321 ஆம் பிரிவின் கீழ் கொள்கலத்தின் முழு மொத்த திரண்மத்தைச் சரிபார்த்தல் தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 ஓகத்து 11 ஆம் திகதிய 1979/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2017.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2017 ஏப்ரல் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

387/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவத்துக்கு தேகப்பயிற்சிகளுக்குத் தேவையான கன்வஸ் பாதணிகளை கொள்வனவு செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் சமர்ப்பித்திருந்த கேள்விப்பத்திரங்களின் பெறுமதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் மேற்படி பாதணி கொள்வனவுடன் தொடர்புடைய, பாதுகாப்பு அமைச்சின் கேள்விப்பத்திர சபையில் இருந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்கள் கேள்விப்பத்திர சபையில் எவ்வளவு காலமாக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

(iii) 2015 ஆண்டில் மேற்படி பாதணி கொள்வனவுடன் தொடர்புடைய, இராணுவத்தின் கேள்விப்பத்திர சபையில் இருந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்கள் கேள்விப்பத்திர சபையில் எவ்வளவு காலமாக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பாதுகாப்பு அமைச்சின் மற்றும் இராணுவத்தின் கேள்விப்பத்திர சபைகளில் தொடர்ச்சியாக பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்திகதியில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

918/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கென்வில் ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி (Canwill Holdings (Pvt.) Ltd.) ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதன் பங்காளர்கள் யாரென்பதையும்;

(iii) மேற்படி பங்காளர்கள் கம்பனி ஆரம்பிக்கப்படுகையில் முதலீடு செய்துள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கம்பனியின் ஆரம்பகால பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாரென்பதையும்;

(v) ஆரம்பகால பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் சம்பளம் மற்றும் படிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் இணைக்கம்பனிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி இணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாரென்பதையும்;

(iii) இவர்களது சம்பளம் மற்றும் படிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

959/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1000/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009 மே 19 ஆம் திகதியளவில் வட மாகாணத்தில் காணப்பட்ட தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை முகாம்களின் எண்ணிக்கை, இவற்றின் நிலப் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) 2015 சனவரி 08 ஆம் திகதியளவில் வட மாகாணத்தில் காணப்பட்ட தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை முகாம்களின் எண்ணிக்கை, இவற்றின் நிலப் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) 2016 செத்தெம்பர் 30 ஆம் திகதியளவில் வட மாகாணத்தில் காணப்பட்ட தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை முகாம்களின் எண்ணிக்கை, இவற்றின் நிலப் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1111/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக பதுளை மாவட்ட மக்கள் பாரியளவில் இன்னல்களை எதிர்கொண்டுள்ளமையை ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்னல்களைச் சந்தித்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் உரித்தாகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கு முன்னர் சுற்றாடல் சாத்தியவள அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1140/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோகபூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஏறாவூர் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள் மற்றும் உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1151/ '16

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு பிரதேசத்திலிருந்து அகற்றப்படும் குப்பைகூளங்களை ஜா-எல பிரதேசத்திற்கு கொண்டுசென்று கொட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நடவடிக்கையின் காரணமாக பிரதேசத்தின் நீர் மூலங்களுக்கும் மற்றும் மக்கள் வாழ்க்கைக்கும் பாரிய பாதிப்பு ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஜா-எல பிரதேச மக்களுக்கு பாரிய நெருக்கடியைக் கொடுக்கின்றதான இக் கருத்திட்டத்தை நிறுத்திவிட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1164/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியயேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், சம்பைமடு கிராம அலுவலர் பிரிவின் கற்பகபுரம் கிராம மக்கள் 1990 ஆம் ஆண்டில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தனரென்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டில் அவ்விதமாக இடம்பெயர்ந்தவர்களில் 130 குடும்பங்கள் எவ்விதமான அடிப்படை வசதிகளுமின்றி மீளக்குடியமர்த்தப்பட்டனர் என்பதையும்;

(iii) இற்றைவரை இவர்களுக்கு அரசாங்க நிவாரணங்களோ வீடமைப்புத் திட்டமோ கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த மக்களுக்கு வீடமைப்புத் திட்டமொன்றையும் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அவசியமான ஏனைய நிவாரணங்களையும் வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாவென்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1168/ '16

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாவலபிட்டிய தேர்தல் ஆளுகைப் பிரதேசத்திற்கு சொந்தமான உலபனையில் அமைந்துள்ள கைத்தொழில்பேட்டையை ஆரம்பிப்பதற்காக கடந்த அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாது என்பதையும்;

(ii) அங்கு எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவந்தன என்பதையும்;

(iii) தற்போது மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழிற்பேட்டையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான புதிய வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1178/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாண நகரத்தில் நிலவிய சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்வெண்ணிக்கையில் தமிழ் தொழில்முயற்சியாளர்களுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை யாது;

(iii) சிங்கள அல்லது வேறு இனப்பிரிவைச் சேர்ந்த ஆட்களுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை யாது;

(iv) அதன் முழுமையான அறிக்கையொன்றினை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 ஆம் ஆண்டில் தமிழ் மற்றும் சிங்கள தொழில்முயற்சியாளர்கள் பேணிவந்த தொழில்முற்சிகள் அனைத்தும் இன்றளவிலும் இயங்கிவருகின்றனவா;

(ii) இன்றேல் அத்தொழில்முயற்சிகளை பேணிவந்த ஆட்கள் அல்லது அவற்றின் பின்னுரித்தாளிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதும் வசித்து வருகிறார்களா;

(iii) ஆமெனில், அதன் முழுமையான அறிக்கையொன்றினை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1218/ '16

கௌரவ டளஸ் அழகப்பெரும,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடத்தப்படாது கடந்துள்ள காலம் 1½ ஆண்டுகளைத் தாண்டியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(ii) புதிய உள்ளூராட்சி சபை தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம், கடந்த அரசாங்கத்தினால் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதி; ஆணைக்குழுவின் காலம் முடிவடைந்த திகதி மற்றும் மேற்படி ஆணைக்குழுவின் விதப்புரைகள் ஆராயப்பட்டதன் பின்னர் புதிய எல்லை நிர்ணயத்துடன் கூடிய தொகுதிகள் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போதைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய சபை நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு கிடைத்திருந்த திருத்தங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த திருத்தங்களை சமர்ப்பித்த திகதிகள், ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) சரியாக நிர்ணயிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அற்ற உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசங்களுக்கான தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1382/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 148 இன்படி, சிலாபம், மிரிஸ்ஸ, கல்முனை, வல்வெட்டித்துறை, காரை நகர் மற்றும் புராணவெல்ல ஆகிய 06 மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 750 மில்லியன் ஒதுக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வீரா என்பதையும்;

(ii) மேலே ஒவ்வொரு துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டங்களுக்கு கேள்விப் பத்திரங்களைக் கோரப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த மற்றும் அவற்றைப் பெற்றுக் கொண்ட நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்கூறிய 06 துறைமுகங்களின் அபிவிருத்திக்காக 2016.12.31 வரை பொதுத் திறைசேரியினால் கடற்றொழில் அமைச்சருக்கு வழங்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) 2017 ஆம் ஆண்டில் மேற்கூறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கக் கூடியதான நிதி ஏற்பாட்டின் அளவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1393/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மற்றும் வலல்லாவிட்ட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் உரமானியத்தை பெற்றுக்கொள்ள வந்த போது மானியத்துக்கான விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் நிழற்பட பிரதியொன்றையும் சமர்ப்பிக்க வேண்டுமென குறிப்பிட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார் என்பதையும்;

(ii) அநேகமான விவசாயிகள் தேசிய அடையாள அட்டை இல்லையென கூறியபோது அடையாள அட்டையின் பிரதியை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டுமென சுற்றுநிருபமொன்று அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அந்தப் பிரதேச விவசாயிகளிடம் உள்ள முதியோர் அடையாள அட்டை, கடவுச் சீட்டுக்கள், சாரதி அனுமதிப் பத்திரங்கள் என்பவற்றை தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இந்த சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

859/ '16

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதுபானம் அருந்துதல் அதிகரித்துள்ளதென்பதையும்;

(ii) மதுபானம் அருந்துதல் ஆட்களின் சுகாதாரச் சீர்கேட்டிற்கு பிரதானமானதொரு காரணமாக அமைகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மதுபானம் அருந்துவதைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மதுபானம் அருந்துதல் காரணமாக ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அரசாங்கம் வருடமொன்றிற்கு செலவிடும் பணத்தொகை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

(iv) இப்பணத்தொகை சுகாதாரத்திற்காக அரசாங்கம் செலவிடும் பணத்தொகையின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

960/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# 2017 ஏப்ரல் 05, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

863/ '16

கௌரவ புத்திக பத்திரன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பேரீச்சம் பழத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கைக்கு பேரீச்சம் பழம் இறக்குமதி செய்யப்படும் பிரதான நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பேரீச்சம் பழம் இறக்குமதியின் போது அதன் தரம் தொடர்பாக பரிசீலிக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில் அது எவ்வாறு என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டில் பேரீச்சம் பழம் இறக்குமதிக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1066/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 2015 - 2020 செயற்பாட்டுத் திட்டத்தில் புகையிரத இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி திட்டம் செயற்படுத்தப்படாதெனில், மாற்றுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரலின்றி இந்தியாவிலிருந்து புகையிரத இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) இந்தியாவில் புகையிரத இயந்திரங்களை உற்பத்தி செய்கின்ற கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்படாமை நல்லாட்சி கோட்பாட்டுக்கு அமைவானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1131/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) டாக்டர் நெவில் பர்னாந்து முதலீட்டு தனியார் நிறுவனம் இலங்கையினுள் மருத்துவ பட்டத்தை வழங்குவதற்காக அனுமதி கோரியுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கை முதலீட்டுச் சபை இதற்கு அனுமதி வழங்கியுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iv) அனுமதியளிக்கும் கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ரஷ்யாவின், நிஷ்னி நொவ்கொரொத் அரச மருத்துவ கல்லூரியுடன் (Nizhny Novgorod State University) இணைந்து பட்டம் வழங்கும் நிறுவனமொன்றை இலங்கையினுள் நிறுவுவதற்கு இந்நிறுவனம் அனுமதி கோரியுள்ளதா என்பதையும்;

(ii) இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iv) அனுமதியளிக்கும் கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) South Asian Institute of Technology and Management என்ற நிறுவனம் South Asian Institute of Technology and Medicine என தமது நிறுவனத்தின் பெயரை மாற்றியமை பற்றி இலங்கை முதலீட்டுச் சபைக்கு அறிவித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1160/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யானைக்கடவையொன்றை திறந்துவைக்கும்போது கவனத்திற்கொள்ளப்படும் விஞ்ஞான ரீதியான பின்னணி யாது;

(ii) யானைக்கடவையினூடாக காட்டு யானைகளுக்குத் திறந்துவிடப்படும் வனப் பிரதேசத்தின் சுற்றாடல் பின்னணி மற்றும் போசனை நிலைமைகள் எவ்வாறிருத்தல் வேண்டும்;

(iii) யானைக்கடவையொன்றை திறந்துவைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவை;

(iv) பொல்பித்திகம, ஹக்வட்டுனாவ உத்தேச யானைக்கடவைகளை திறந்துவைப்பதன் மூலம் இந்நோக்கங்கள் நிறைவேறுகின்றனவா;

(v) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பிரதேசத்தில் நிலவுகின்ற யானை மனித மோதலைக் குறைப்பதில் யானைக்கடவைகளைத் திறந்து வைத்தல் தாக்கத்தை ஏற்படுத்துவது எவ்வாறு;

(ii) உத்தேச யானைக் கடவைகள் வரலாற்றுக் காலம்தொட்டு இருந்து வந்துள்ளதென்பதை விஞ்ஞான ரீதியில் நிரூபிக்க முடியுமா;

(iii) ஆமெனில், அது எவ்வாறு;

(iv) அவ்வாறாயின், அப்பிரதேசத்தை அரசாங்க தலையீட்டின் கீழ் மக்கள் குடியேற்றங்களாக ஆக்கப்பட்டது ஏன்;

(v) குறைந்த பட்சம் அக்காலத்தில் இது ஒரு யானைக்கடவையாக இருந்தமை பற்றி அறிவூட்டப்படாதது ஏன்;

(vi) உண்மையிலேயே அது ஒரு யானைக்கடவையாயின், ஒரு கிராமம் உருவாகலாமா;

(vii) கருவலகஸ்வெவ யானைக்கடவையில் அமைக்கப்பட்ட குடியேற்றம் வெற்றியளிக்காதிருந்தது ஏன்;

(viii) இப்பாகமுவ வரை கிராமங்களினுள் ஊடுருவிய காட்டு யானைகளை யானைப் பாதுகாப்புப் பிரதேசங்களுக்கு விரட்டுவதற்கு தலையீடு செய்வாரா;

(ix) ஆமெனில், அத் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1179/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முல்லைத்தீவு மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1287/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் உத்தியோகத்தர்களின் சேவையை வினைத்திறன்மிக்க விதத்தில் பெற்றுக்கொள்ளும் பொருட்டும், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக இவர்கள் ஆற்றிவரும் சேவையை பாராட்டும் பொருட்டும், கடந்த அரசாங்கம் இவர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014.12.31 ஆம் திகதி வரை மாத்தறை மாவட்டத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின்படி அந்த எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015.01.01 ஆம் திகதியிலிருந்து இன்றுவரை, மாத்தறை மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மத்தியில் சலுகை விலை அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அது மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பதவி வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களைப் பெற உரித்துடைய மாவட்டத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் மத்தியில், இற்றைவரை மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படாத பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இவர்களுக்கு மேற்படி மோட்டார் சைக்கிள்களை வழங்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1346/ '16

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "பர்ப்பச்சுவல் ரெசரீஸ்" நிறுவனத்தினால் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி முறிகளை கொள்வனவு செய்யும் போது முறைகேடு இடம்பெற்றுள்ளதாக COPE அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அந்தச் சம்பவம் தொடர்பாக 2015 ஆம் ஆண்டு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் விசாரணை நடத்தப்பட்டது என்பதையும்;

(iii) அந்த விசாரணை தொடர்பான அறிக்கை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் நாகஹமுல்ல என்ற உத்தியோகத்தரினால் 2015 யூன் மாதம் அல்லது அதற்கு அண்மித்த காலத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அந்த WPI கடிதக் கோப்பு சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றவியல் பிரிவின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(v) சில தினைங்களுக்குப் பின்னர் அந்தக் கடிதக் கோவையை சட்டமா அதிபர் மீண்டும் பெற்றுக் கொண்டு அந்த விசாரணையை நிறுத்தி, சிவில் பிரிவின் உயர் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கி உள்ளார் என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்தக் கடிதக் கோப்பு ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தரின் பெயர் யாது என்பதையும்;

(ii) அந்த உத்தியோகத்தரிடமிருந்து கடிதக் கோப்பு வாபஸ் பெறப்பட்டமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) அந்த கடிதக் கோப்பு தொடர்பான தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(iv) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி விசாரணை தொடர்பில் குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1392/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2012 தொடக்கம் இன்றுவரை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சமுத்திரப் பிரிவினால் இலங்கை பிரஜைகள் 5200 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) இவர்களில் பெரும்பாலானோர் கடும் பிணை நிபந்தனைகளில் விடுவிக்கப் பட்டுள்ளதுடன், இவர்கள் ரூபா 50,000 தொடக்கம் ரூபா 20 இலட்சம் மற்றும் ரூபா 40 இலட்சம் வரை பிணை வைத்துள்ளனரென்பதையும், ஏனையோர் பிணை பெற்றுக்கொள்ள முடியாமல் சிறையிலிடப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடும் பிணை நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளமையின் காரணமாக சந்தேக நபர்களின் பிணைகளுக்கு ஆதனங்களை எழுதுதல், கல்விக் கடன் பெறுதல் மற்றும் இறுதி விருப்பாவணங்களைக் கூட எழுத முடியாதுள்ளதென்பதையும்;

(ii) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் நாட்டின் பல்வேறு மாகாணங்களில் வசிப்பவர்களாவர் என்பதுடன் ஒவ்வொரு மாதமும் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு வந்து புத்தகங்களில் கையொப்பம் இட வேண்டியதனால் அவர்கள் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவர்களுக்கு எதிராக குற்றச் சாட்டுக்கள் இருப்பின் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அல்லது அவ்வாறு இல்லாவிடின் விடுவிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2017 ஏப்ரல் 06, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

891/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தங்கம், வெள்ளி மற்றும் இரும்பு சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிலாளர்கள் பாரம்பரியமாக, வசிக்கும் பிரதேசங்கள் பற்றி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில், வசிக்கும் மேற்படி கைத்தொழிலில் பாரம்பரியமாக ஈடுபடும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கைத்தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரதானமான பிரச்சினைகள் பற்றி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அப்பிரச்சினைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

(iii) உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்குத் தேவையான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதற்கு அரசாங்கம் தலையிட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு வெளிநாட்டு தொழில்வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றவா என்பதையும்;

(iv) ஆமெனின், அந்நாடுகள் யாவை என்பதையும்;

(v) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இப்பொருட்கள் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

952/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச ஊழியர்களுக்கு சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தபால்காரர்களும் மோட்டார் சைக்கிள்களைக் கோரியுள்ளார்கள் என்பதையும்;

(ii) இவர்களுக்கு இதுவரை மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களுக்கு சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின், அது எத்திகதியில்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1067/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹவையிலிருந்து வவுனியா வரையிலான புகையிரதப் பாதையை புனரமைப்பதற்கு அப்போதைய உள்ளாட்டு போக்குவரத்து அமைச்சர் கௌரவ ரஞ்சித் மத்தும பண்டாரவினால் 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை நிருபமொன்று சமர்ப்பிக்கப்பட்டதென்பதையும்;

(ii) அதற்கேற்ப இலங்கை புகையிரத திணைக்களத்தினால் தண்டவாளங்களும் பாலங்களும் ஒவ்வொரு பகுதியாக இறக்குமதி செய்யப்பட்டு திணைக்களத் தினால் அல்லது உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் ஊடாக மேற்படி புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கள் கோரப்படாமல் இந்திய கைத்தொழிலாளர்களுக்கு புகையிரதப் பாதை புனரமைக்கப்படுவதை கைளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தீர்மானத்தின் மீது செல்வாக்கு செலுத்திய காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1170/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 செத்தெம்பர் தொடக்கம் 2015 பெப்ருவரி வரையான காலப்பகுதியில் லங்கா சதொச மூலமாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு யாது;

(ii) இதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா;

(iii) ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் யாவை;

(iv) இறக்குமதி செய்த அரிசியை விடுவிப்பதற்கு மற்றும் தாமதக் கட்டணங்களுக்காக இலங்கைச் சுங்கத்திற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) ஒரு கிலோ அரிசியின் இறக்குமதி விலை மற்றும் விற்பனை விலை தனித்தனியாக யாது;

(vi) அதற்கிணங்க லங்கா சதொசவிற்கு நேர்ந்த நட்டம் யாது;

(vii) இந்த தொகையிலிருந்து விற்பனை செய்யப்பட்ட அரிசியின் அளவு யாது;

(viii) பழுதடைந்த அரிசியின் அளவு மற்றும் அரிசியை விலங்குணவாக விற்பனைசெய்ய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த திகதி யாது;

(ix) இவ்விதமாக விற்பனைசெய்யப்பட்ட அரிசியின் அளவு, ஒரு கிலோ அரிசியின் விலை மற்றும் நேர்ந்த நட்டம் வெவ்வேறாக யாது;

(x) விலங்குணவாக மேற்படி பழுதடைந்த அரிசியை கொள்வனவு செய்த நிறுவனம் மற்றும் அளவு யாது;

(xi) அரிசி இறக்குமதி தொடக்கம் விற்பனை வரையான ஒட்டுமொத்தச் செயற்பாட்டினுள் லங்கா சதொச செலவிட்ட பணத்தொகை, ஈட்டிய பணத்தொகை மற்றும் நட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1237/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1289/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதில், மிகவும் தீர்க்கமானதாக காணப்பட்ட அதிவேக நெடுஞ்சாலைகளை அமைத்தல் கடந்த அரசாங்கத்தின் முதனிலை அபிவிருத்தி மூலோபாயமாக இருந்தது என்பதையும்;

(ii) அதன்படி, நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மாத்தறை – பெலிஅத்த அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கு அவசியமான காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மாத்தறை, திஹகொட பிரிவில் இழப்பீடு மதிப்பீட்டின்போது காணி உரிமையாளர்களுக்கு ஒரு அநீதி நேர்ந்துள்ளது என்பதையும்;

(iv) இதன்போது அதிவேக நெடுஞ்சாலைக்கு பக்கத்தில் எஞ்சுகின்ற காணிகளின் பெறுமதி, நிலவும் பெறுமதிக்கு ஒப்பீட்டளவில் குறைவடைதல் விலைமதிப்பீடு செய்யப்படவில்லை என்பதையும்;

(v) ஆதனத்தின் ஒரு பகுதி மட்டும் சுவீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் எஞ்சும் பகுதி ஓரக்காணிகளாக மாறுவது கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதையும்;

(vi) வயற் காணிகளை சுவீகரிக்கும்போது கணிப்பிடப்பட்ட எதிர்கால தொழில் இழப்புகள், மேட்டு நில பயிர்ச் செய்கையின் பொருட்டு கணிப்பிடப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சாதாரண நெடுஞ்சாலையொன்று விஸ்தரிக்கப்படும்போது, பக்கத்திலுள்ள காணிகளின் பெறுமதி அதிகரிக்கின்ற போதிலும், அதிவேக நெடுஞ்சாலைகள் தொடர்பில் அவ்வாறு நடைபெறாமை குறித்து விசேடமாக ஆராயும் மாற்று இழப்பீடு மதிப்பீட்டு முறையொன்றின் அவசியத்தை ஏற்றுக்கொள்வாரா?

(ii) அதன்படி, திஹகொட, கப்புதூவ பிரதேசத்தில் ஆதனங்கள் மற்றும் பயிர்களை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1398/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தின் 168 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், கறுவா பயிற்சி நிலையத்தை விஸ்தரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 50 மில்லியன் தொகை செலவிடப்பட்ட விதம் பற்றிய செலவு விபரத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்:

(iii) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள கறுவா பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(v) 2016 ஆம் ஆண்டில் கறுவா பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையும் பெயர்களும் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

892/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில், துலா வெல்லிய கிராமத்தை சார்ந்து வாழும் "வன்னி சிங்கள" என்ற இனம் பற்றி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கிராமத்தை தவிர இவ்வின மக்கள் வாழும் வேறு கிராம அலுவலர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) யுத்த காலத்தில் பல்வேறு பாதிப்புக்களை சந்தித்த இம்மக்கள் வாழும் கிராமங்களில் அடிப்படை தேவைகள் குறைந்த மட்டத்தில் நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இவ்வசதிகளை துரிதகதியில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மக்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

(iii) இம்மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1068/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்தில் பணியாற்றும் ஏவலாளர்கள் ஒன்றிணைந்த சேவையை சேர்ந்தவர்களாவர் என்பதையும்;

(ii) ஏவலாளர்களை நேரடியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகாரம் இல்லையென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டில் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஏவலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வனுமதி கிடைத்த திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றை சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஏவலாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நேர்முகப் பரீட்சை மேலதிக புகையிரத பொதுமுகாமையாளரின் (நிருவாகம்) தலைமையில் நடாத்தப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உத்தியோகத்தர் சேவை இடைநிறுத்தத்திற்கு உள்ளாகியிருந்தார் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) சேவை இடைநிறுத்தத்திற்கு உள்ளாகியுள்ள உத்தியோகத்தரொருவர் சேவையில் ஈடுபடுவது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1238/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையை இச்சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1291/ '16

கௌரவ டலஸ் அலஹப்பெரும,— நீர்ப்பாசன மற்றும் நீர் வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் உள்ள மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் சொந்தமான நீர்ப்பாசன திட்டங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசன திட்டங்களின் மூலம் பயிர்ச் செய்கை செய்யப்படுகின்ற மொத்த வயற் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வயற் காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மத்திய அரசாங்கத்துக்கு சொந்தமான நீர்ப்பாசன திட்டங்களை பராமரிப்பதற்கு அல்லது புனரமைப்பதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை;

(ii) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்துக்குரிய நீர்ப்பாசன திட்டங்களை பராமரிப்பதற்கு அல்லது புனரமைப்புக்கு செலவிடப்பட்ட பணத் தொகை;

ஒவ்வொரு ஆண்டுக்கமைய வெவ்வேறாக யாதென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1435/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சர்வதேச நியமங்களுக்கு இசைவாகும் பொருட்டு மீன்பிடி படகுகளில் சமிக்ஞை கடத்திகளை (Transponders) பொருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்கு 2016 வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 153 இல் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அரசாங்கத்தால் அவ்வாறு வழங்கப்படுகின்ற சமிக்ஞை கடத்திகள் மற்றும் படகு ஒன்றுக்காக வழங்கப்படுகின்ற சமிக்ஞை கடத்திகளின் பெறுமதி தனித் தனியாக யாது என்பதையும்;

(iii) மேற்படி வரவு செலவுத் திட்ட முன்மொழிவின்படி 2016 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் சமிக்ஞை கடத்திகள் வழங்கப்பட்ட மீன்பிடி படகு உரிமையாளர்களின் பெயர் பட்டியல் ஒன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1049/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— மாநகரசபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகரசபை ஆளுகை பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் கட்டடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வமைச்சுக்கள் பேணிவரப்படும் கட்டிடங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்கட்டடங்களில் ஒரு சதுர அடிக்கு செலுத்தப்படும் குத்தகைத் தொகை மற்றும் சேவைக் கட்டணம், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) இக்கட்டடங்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக உள்ள இடப்பரப்புக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு மாநகரசபை ஆளுகை பிரதேசத்தில் அமைந்துள்ள அமைச்சுக்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேக்கு கொண்டு செல்லப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்குத் தேவையான கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(iii) கொழும்பு மாநகரசபை ஆளுகை பிரதேசத்திலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுரவிற்கு கொண்டு செல்லப்படும் மற்றும் கொண்டு செல்லப்படாத அமைச்சக்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1239/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1292/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் இடையறாது பேணிவரப்பட்ட, மானிய அடிப்படையில் நெற் செய்கையாளர்களுக்கு உரம் வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டம் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தில் நெற் செய்கையாளர்களுக்கு அரசாங்கத்தினால் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள உரத்தின் அளவு ஒவ்வொரு ஆண்டிற்கேற்ப மற்றும் ஒவ்வொரு உர வகைக்கு ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் கமநல சேவைப் பிரிவுகளுக்கு ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) அரசாங்கத்தின் உர மானியத்தை பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகள் பூர்த்திசெய்ய வேண்டிய தேவைப்பாடுகள் யாவையென்பதையும்;

(v) 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தில் அரச உர மானியத்திற்காக தகைமை பெற்ற நெற் செய்கையாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டிற்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 ஏப்ரல் 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

893/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், பாணம கிராமத்தில் வசிக்கும் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மிகவும் சகவாழ்வுடன் வசிக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இம்மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதில் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாணம பிரதேச மக்களின் தண்ணீர், காணி சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி மக்களின் கலாசார தனித்துவங்கள் மற்றும் பாரம்பரிய உரிமைகளை பேணி வாழ்வதற்கு அரசாங்கம் அனுசரணை வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1069/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேசிக்கப்பட்டுள்ள குருநாகல் – தம்புளை புகையிரத வீதிக்கான சாத்தியவள கற்கையை மேற்கொள்ளல் சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரலின்றி சீனாக் கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், ஒப்படைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி சாத்தியவள கற்கையை மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அல்லது வேறொரு உள்நாட்டு நிறுவனத்திற்கு ஒப்படைக்காமைக்கான காரணம் யாதென்பதையும்,

(iv) இதன் பொருட்டு சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1240/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையை இச்சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1293/ '16

கௌரவ டலஸ் அலஹப்பெரும,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் பயிரிடப்படுகின்ற வயற் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வயற் காணிகளுக்கு நீர் வழங்கப்படுகின்ற விதம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்ட நெல் விளைச்சல் ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள நெல் விளைச்சல் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1437/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 160 இன்படி, தெங்கு மேம்பாடு அடங்கலாக தெங்கு உற்பத்தி வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 250 மில்லியன் நிதி பகிர்ந்தளிக்கப்பட்ட விதத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவின் ஒரு பகுதியாக இலங்கைக்கு தேங்காய் இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை மற்றும் இறக்குமதியாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 1977 தொடக்கும் 2016 ஆம் ஆண்டு வரை இலங்கையின் தெங்கு உற்பத்தி, தெங்கு உற்பத்தி சார்ந்த ஏற்றுமதிகள் மற்றும் அவற்றின் பெறுமதியை அட்டவணைப்படுத்தி சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1241/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவனியா மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1295/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் காணப்படும் அரச காணிகளின் அளவு எவ்வளவு;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மாத்தறை மாவட்டத்தில் குடியமர்வதற்காக பகிர்ந்தளிப்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள அரச காணிகளின் அளவு எவ்வளவு;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் குடியமர்வதற்கு காணிகள் அற்ற மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அத் திகதி யாது;

(iii) இது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற அல்லது நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1440/ '16

கௌரவ புத்திக பத்திரன,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரன்மினிதென்ன ரெலி சினிமா கிராமத்தை அமைக்க செலவான பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்கென பணத்தைப் பெற்றுக்கொண்ட மூலங்கள் யாவை என்பதையும்;

(iii) 2015.01.01 தொடக்கம் 2016.12.31 ஆம் திகதி வரை ரெலி சினிமா கிராமம் ஈட்டியுள்ள வருவாய் யாதென்பதையும்;

(iv) இதன் நிர்வாக நடவடிக்கைகள் எந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இந்தக் கிராமத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென அரசாங்கம் தொடர்ந்தும் பணத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்விதத்தில் என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

920/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 முதல் 2015 வரையிலான காலத்தினுள் இலங்கை துறைமுக அதிகாரசபை பழைய இரும்பு விற்பனைக்காக நடவடிக்கை மேற்கொண்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iii) 2011 முதல் 2015 வரை ஒவ்வொரு வருடத்திலும் விற்பனை செய்யப்பட்ட இரும்பின் அளவுகளும் விலைகளும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி இரும்பினை கொள்வனவு செய்த ஆட்கள் மற்றும் ஒவ்வொரு ஆளினாலும் கொள்வனவு செய்யப்பட்ட இரும்பின் அளவு வெவ்வேறாக யாவையென்பதையும்;

(v) சந்தை விலையைப் பார்க்கிலும் குறைந்த விலைக்கு விற்கப்பட்டமை காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1061/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அங்கவீனர்களான பலர் உள்ளனர் என்பதையும்;

(ii) இவர்களில் குறிப்பிடத்தக்கதொரு தொகையினரின் முள்ளந்தண்டுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் காரணமாக இடுபுக்குக் கீழ் பகுதி செயலிழந்துள்ளதென்பதையும்;

(iii) இடம்பெயர்ந்துள்ள இவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதோடு இன்னும் சிலர் இதுவரை குடியமர்த்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வீடுகள் மற்றும் மலசலகூடங்கள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும்போது மேற்கூறப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் வீடுகளுக்கு பிரவேசித்தல் மற்றும் மலசல கூடங்களைப் பயன்படுத்துதல் ஆகிய வசதிகள் தொடர்பாக கவனஞ் செலுத்தி அவற்றுக்குப் பொருத்தமான விதத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளையும் மலசலகூடங்களையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்தனை சதவீதத்தில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1124/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஊவா மாகாணத்தில் தனியார் பேருந்துகளுக்காக வீதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அவ்விதமாக வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வீதிகள் யாவை;

(iii) அவ்விதமாக வீதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஆட்களின் பெயர்கள் யாவை;

(iv) அதற்காக கடைப்பிடித்த முறையியல்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1278/ ' 16

கௌரவ நளின் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.10.01 ஆம் திகதியாகின்றபோது கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2016.06.11 ஆம் திகதியாகின்றபோது மேற்படி சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த நிலையான வைப்புக்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி சங்கத்திலிருந்து கடன் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளில், கடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் இற்றைவரை கடன் தொகை விடுவிக்கப்படாதுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள மொத்த கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு கடன் விடுவிக்கப்பட தாமதம் ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vii) மேற்படி சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு உரியவாறு கடன் தொகையை விடுவிப்பதற்கு இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(viii) ஆமெனில், மேற்படி சங்கத்தின் நிதி நிருவாகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1319/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த தினங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு/மண்சரிவு அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இன்றளவில் ஒரு குடும்பத்திற்கு ரூபா 10,000/- மட்டுமே கிடைத்துள்ளது எள்பதையும்;

(ii) மேற்படி அனர்த்தம் காரணமாக சேதத்திற்கு உள்ளான சொத்துக்கள் மற்றும் வீடுகளுக்காக அரசாங்கம் வழங்க உறுதியளித்திருந்த நிவாரணங்கள் அதாவது, பொருட்களுக்காக பணம் மற்றும் வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக மாற்றுக் காணிகள் இதுவரையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேலும், பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு மூன்று மாதச் சம்பளம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுமெனக் கூறப்பட்ட போதிலும் குறித்த கடன்தொகை இதுவரையிலும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகை அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுமா என்பதையும்; ஆமெனில் மேற்படி தொகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க வேண்டியுள்ள எஞ்சிய தொகை, வீடுகளை அமைத்துக்கொள்வதற்கான காணிகள் மற்றும் உதவிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1347/ '16

கௌரவ லக்கீ ஜயவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "அண்மித்த பாடசாலை - சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள உடுநுவர தேர்தல் தொகுதியிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட பாடசாலைகள் யாவை என்பதையும்;

(iii) தற்சமயம் மேற்படி பாடசாலைகளில் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை என்பதையும்;

(iv) இப்பாடசாலைகளில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) "அண்மித்த பாடசாலை – சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் இடவசதி குறைவாக காணப்படும் பாடசாலைகளுக்காக கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டட வசதிகள் மிகவும் தேவையான பாடசாலைகளுக்கு கட்டடங்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளுக்கும் விரைவில் கட்டட வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1349/ '16

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்கள் பொதுவாக தொழில் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு முன்வருகின்றார்கள் இல்லையென்பதையும்;

(ii) இன்றைய காலகட்டத்தில் இலங்கையின் தொழில் சந்தையின் கேள்வியை நிரப்புகின்றபோது இளம் சந்ததியினரிடமுள்ள திறன்களில் பொருந்தாத தன்மை காணப்படுகின்றதென்பதையும்;

(iii) பிள்ளைகளுக்கு பல்வகை ஆற்றல்களுக்கான பயிற்சிகளை பெற்றுக்கொடுத்து, புதிய தொழில் வாய்ப்புக்களை வழங்க வேண்டிய அத்தியாவசிய தேவை காணப்படுகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆரம்ப நிலை தொடக்கம் மூன்றாம் நிலை வரை பாடசாலை மாணவர்களின் தொழில் ஆற்றல்களை வளர்ப்பதற்கு உறுதுணையாகும் முகமாக, கல்வி அமைச்சினதும் ஒத்துழைப்புடன் பாடசாலை பாடத்திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?